**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No.20/2016**

2023-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் நாள் புதன்கிழமை **வா.சா.1**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கிரேடு - 1 பென்ச் கிளார்க் திரு.பாலசுப்பிரமணியன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| **பெயர்** | ராஜேஸ்வரி | **வட்டம்** | |
|---|---|---|---|
| **க/பெ** | பிச்சைக்கண்ணு | **சமயம்** | |
| **கிராமம்** | | **வயது** | |

**முதல் விசாரணை:(22.02.2023)**

நான் இவ்வழக்கில் வாதியாவேன். எனக்கு வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதை நான் படித்துப் பார்த்து கையொப்பமிட்டேன். என் தரப்பில் மலைராஜ் பெயரிலுள்ள நிலவுடமை குறிப்பேடு நகல் வா.சா.ஆ.1-ஆகவும்,

மலைராஜ் பெயரிலுள்ள நிலவுடமை குறிப்பேடு நகல் வா.சா.ஆ.2-ஆகவும்,

மலைராஜ் பெயரிலுள்ள பட்டா நகல் வா.சா.ஆ.3-ஆகவும்,

மலைராஜ் பெயரிலுள்ள பட்டா நகல் வா.சா.ஆ.4-ஆகவும்,

20.06.2007-ம் தேதிய பதிவு கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5-ஆகவும்,

27.06.2007-ம் தேதிய பதிவு கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6-ஆகவும்,

29.10.2009-ம் தேதிய பதிவு கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7-ஆகவும்,

29.10.2009-ம் தேதிய பதிவு கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.8-ஆகவும்,

வாதிகளின் வம்சாவழி ஜாபிதா அசல் வா.சா.ஆ.9-ஆகவும் குறியீடு செய்யப்பட வேண்டுகிறேன். என் நிரூபண பிரமாண வாக்குமூலத்தையும், என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் 9 ஆவணங்களையும் ஏற்றுக்கொண்டு பிராதுப்படி உத்தரவிட வேண்டுகிறேன். மேற்படி வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல்கள் என்பதால் அவற்றின் உண்மை தன்மை மற்றும் தொடர்பு குறித்து ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்குவிசாரணை:** இல்லை.